கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண்.30/2020 வா.சா.1 கனகராஜ்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 01.07.2025

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி

1) எங்கள் சங்கத்தினால் கட்டப்பட்டதுதான் ருக்குமணியம்மாள் பள்ளி என்றால் சரிதான். எங்கள் சங்கத்தால் கட்டப்பட்ட கட்டிடத்தை வணிக வாடகைக்காக விடப்பட்டது என்றால் சரிதான். குறைந்த வாடகைக்கு சேவை மனப்பான்மையுடன் அவ்வாறு செய்கிறோம். அவ்வாறு குறைந்த வாடகை பெறுவதற்கான ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வாடகை ஒப்பந்தம் உள்ளது ஆனால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வணிக நோக்கத்துடன் அதிக வாடகை பெறுவதால்தான் மேற்படி வாடகை ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சிறப்பு அறிவிப்பு பள்ளிக்கு அனுப்பப்பட்டதா என்றால் அனுப்பப்பட்டது.

2) மேற்படி சிறப்பு அறிவிப்பு பெற்ற பிறகு குறைந்த வாடகை பெறுவதாக பதில் எதுவும் நாங்கள் நகராட்சிக்கு அனுப்பவில்லை என்றால் சங்கத்தின் பேரில் அறிவிப்பு இல்லாததால் கொடுக்கவில்லை. பள்ளிக்கு அனுப்பப்பட்ட சிறப்பு அறிவிப்புகள் அனைத்தும் சங்கத்தின் பார்வைக்கு வந்தது என்றால் சரிதான். மேற்படி சிறப்பு அறிவிப்புகளுக்கு எதிராக மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் நீதிபேராணை மனு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். சிறப்பு அறிவிப்புகள் பள்ளிக்கு அனுப்பப்படாமல் சங்கத்திற்கே நேரடியாக அனுப்பவேண்டும் என கோரி மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் நீதிபேராணை மனு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

3) 3 சிறப்பு அறிவிப்புகள் அனுப்பப்பட்டுள்ள நிலையில் 3 வழக்காக தொடராமல் ஒரே

வழக்காக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். வழக்கு பள்ளிக்கு வழக்கு அறிவிப்புகள் பெற்றதுபோல பொள்ளாச்சியில் வேறு பள்ளிகளும் அறிவிப்பு பெற்றபோது அவை மாண்புமிகு உயர்நீதிமன்றத்தை நாடியபோது அவ்வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நகராட்சி தொடர்பாக வரி விதிப்பு தொடர்பான அரசு இதழ் வெளியிடுகளை பற்றி எங்கள் சங்கம் தெரிந்திருக்கவேண்டும் என்றால் நகராட்சி பற்றியது என்பதால் எனக்கு தெரியவில்லை.

4) நகராட்சி அனுப்பிய ஒவ்வொரு சிறப்பு அறிவிப்பும் உரிய சட்டத்தின்படி முறையாகதான் அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி சிறப்பு அறிவிப்புகள் சட்டப்படி சரியானது என்பதால்தான் நாங்கள் பள்ளியை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. கட்டிட உரிமையாளர் எங்கள் சங்கம் என்பதால் பள்ளியை சேர்க்கவில்லை.

5) நான் வாதி சங்கத்தில் இருந்து எப்போது விடுவிக்கப்பட்டேன் என்றால் கடந்த 31.12.2024 அன்று பணி ஓய்வு பெற்றேன். நான் பணி ஓய்வு பெற்றபிறகும் வாதி சங்கத்திற்கு சார்பாக சாட்சியம் அளிக்கவும், வழக்கு நடத்தவும் அனுமதிவழங்கப்பட்டதாக தீர்மானமோ கடிதமோ நான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் எனக்கு கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

6) நான் சொல்வதுபோல் வாதி சங்கம் இயங்கவில்லை என்றும், அதனால் எனக்கு தற்போது சாட்சியம் அளிக்க தகுநிலை இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. அனைத்து சிறப்பு அறிவிப்புகளும் உரிய சட்டவிதிகளுக்கு உட்பட்டு முறையாக அனுப்பப்பட்டுள்ளதால் அவை செல்லத்தக்கவை என்றும், அவற்றிற்கு எதிராக தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு தள்ளுபடிகுரியது என்றும் சொன்னால் சரியல்ல.